**<u>காயல்பட்டினம் நகராட்சி நகர்மன்ற கூட்ட அரங்கில்</u>**
**<u>27.04.2023 ஆம் நாள் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்டத்தின்</u>**
**<u>தீர்மானம் நகல்கள்</u>**

**<u>பொருள் எண்:1</u>**
**<u>நகர்மன்ற தலைவரால் கொண்டு வரும் தீர்மானம்:</u>**

காயல்பட்டினம் நகராட்சி எல்லையை அறிந்து கொள்ளும் வகையில் நகராட்சி எல்லையில் வரவேற்பு & நன்றி தெரிவிக்கும் பெயர் பலகைகள் (1) ஓடக்ககரை (2) பைபாஸ் சாலை ( போலீஸ் செக் போஸ்ட் எதிர் புறம்) (3) சூர்யா மர இழைப்பகம் (DCW பாலம் அருகில்) (4) எல்.எப். சாலை ஆகிய நான்கு இடங்களில் துருப்பிடிக்காத STAINLESS STEEL - DOUBLE SIDE FACE NAME BOARD அமைப்பதற்கு இந்நகர்மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொண்டு தீர்மானித்தல்.

**<u>தீர்மானம் எண்.329</u>**

- நகராட்சி எல்லையில் வரவேற்பு & நன்றி தெரிவிக்கும் பெயர் பலகை அமைக்க தீர்மானிக்கப்பட்டது.
- இந்நகராட்சி நிதியிலிருந்து செலவீனங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்.2</u>**

காயல்பட்டினம் நகராட்சியின் 1வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. R. மாரீஸ்வரி அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

காயல்பட்டினம் பைபாஸ் சாலை நுழைவு வாயில்களில் ஒன்றாக இருக்கும் உச்சினி மகாளி அம்மன் கோவில் தெருவில் வழிப்பறி மற்றும் திருட்டு போன்ற குற்ற சம்பவங்கள் அதிகம் நடைபெறுகின்றது அதை தடுக்கும் வகையில் மக்கள் அதிகம் பயன்படுத்தும் சாலையில் ஊர் பொது மக்களின் நிதி பங்களிப்புடன் (LED) விளக்கு அமைப்பதற்கு, ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதற்கான மின்சார இணைப்புகள் பெறுவதற்கு நகராட்சி மூலம் மின்வாரியத்தில் அனுமதி பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ள கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**<u>தீர்மானம் எண்.330</u>**

இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் புதிய LED தெருவிளக்குகள் அமைப்பதற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. பணிகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

**<u>பொருள் எண் :3</u>**

காயல்பட்டினம் நகராட்சியின் 12 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.N.J.S. முத்து ஜெய்னம்பு அவர்கள் கீழ்க்காணும் பணிகள் செய்வதற்கு தீர்மானம் நிறைவேற்றி தருவதற்கு தெரிவித்துள்ள கோரிக்கைகள் மன்றத்தின் பார்வைக்கும் பரீசிலனைக்கும் வைக்கப்படுகிறது.

**சாலை வசதி**

ஆறாம் பள்ளி தெரு, முஹைதீன் தெரு ஆகிய தெருக்களின் பழைய சாலைகளை அகற்றி விட்டு புதிய தார் சாலைகள் அமைத்தல்.

**தெருவிளக்கு வசதி**

- கீ.மு கச்சேரி தெரு- அம்பல மரைக்காயர் தெரு, ஆறாம் பள்ளி தெரு, சதுக்கை தெரு ஆகிய சந்திப்புகளில் போதிய வெளிச்சம் இல்லாமல் இருள் சூழ்ந்து காணப்படுவதால் அந்த பகுதிகளில் உயர்மின் விளக்கு (High Mass Light) அமைத்தல்.

**ஆக்கிரமிப்பு**

- ஹாஜி அப்பா தைக்கா தெரு (Fowziya கடை சாலை) சாலையில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற கோரி பல முறை முயற்சி செய்ததின் விளைவாக கடந்த 24.10.2022 அன்று ஆக்கிரமிப்புகளை அகற்ற முதல் கட்டமாக நகராட்சி அதிகாரிகள் வந்து ஆய்வு செய்து ஆக்கிரமித்துள்ள கடைகளை எச்சரித்து நோட்டீஸ் கொடுத்து விட்டு சென்றார்கள். முதல் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதுவரை தடுப்புகள் அமைக்கவில்லை. காலம் தாழ்த்தாது உடனே தடுப்புகள் அமைக்க கோருதல்.
- ஆறாம் பள்ளி தெரு மற்றும் ஹாஜி அப்பா தைக்கா தெருக்கள் (Main Road) பேருந்து போக்குவரத்து மற்றும் கடைகள் அதிகமுள்ள சாலை. இச்சாலைகளின் இருபுறமும் அதிகமாக ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதால் விபத்துக்கள், போக்குவரத்து நெரிசல் போன்றவைகளால் நமது ஊர் மக்கள் குறிப்பாக பெண்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். எனவே, அங்கு இருபுறமும் பல வகைகளில் சாலையை ஆக்கிரமித்துள்ள ஆக்கிரமிப்புகளை இதன் அவசர அவசியத்தை உணர்ந்து சற்றும் காலம் தாழ்த்தாது அனைத்து ஆக்கிரமிப்புகளும் அகற்ற கோருதல்.

**பொது**

- கி.மு. கச்சேரி தெருவில் எப்பொழுதும் மின்சார அளவில் ஏற்றத்தாழ்வுகள் (Voltage Problem) ஏற்படுவதால் (Small Transform) அமைக்க மின்வாரியத்திடம் தெரிவித்தல் தொடர்பாக.
- 12-வது வார்டுக்குட்பட்ட அனைத்து தெருக்களின் இரு ஆரம்பத்திலும், தரமான தெளிவான பெயர் பலகைகள் அமைத்தல்.
- ஆறாம் பள்ளி தெருவில் வேகத்தடைகள் இருப்பது பெரிதாக தெரிவதில்லை. எனவே, அங்கு தினந்தோறும் விபத்துக்கள் ஏற்படுகின்றன. ஆகவே அங்குள்ள இரு வேகத்தடைகள் இருப்பதை அறியும் விதமாக அவைகளுக்கு Reflection Stickers ஒட்டக் கோருதல்.

**<u>தீர்மானம் எண்.331</u>**

- அரசிடமிருந்து அனுமதி / மானியம் பெற்று சாலை பணிகள் செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது.
- இந்நகராட்சிக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் புதிய LED தெருவிளக்குகள் அமைப்பதற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. பணிகளை விரைந்து முடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

- பொது மக்கள் நலன் கருதி ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.
- இந்நகராட்சி நிதி நிலைமைக்கு ஏற்றவாறு பொது கோரிக்கைகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

**பொருள் எண்:4**

காயல்பட்டினம் நகராட்சி 15-வது நிதிக்குழு திட்ட மானியம் 2022-2023 ஆம் ஆண்டிற்கான Tied Grant-மானிய நிதியில் LCV மற்றும் BOV வாகனங்கள் கொள்முதல் செய்து கொள்ள ரூ. 45.90 இலட்சத்திற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.18277/2022/CFC-1 நாள்.21.03.2023-ன்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| வ. எண் | வாகனங்கள் மொத்த தேவைகள் | | தற்போது உள்ள வாகனங்கள் | | தேவையான நிகர வாகனங்கள் | | அனுமதிக்கப்பட்ட திட்ட மானியம் (இலட்சத்தில்) | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | BOV | LCV | BOV | LCV | BOV | LCV | BOV | LCV |
| 1 | 25 | 8 | 13 | 5 | 12 | 3 | 24.00 | 21.90 |

இந்நகராட்சிக்கு BOV மற்றும் LCV வாகனங்கள் வாங்க அனுமதிக்கப்பட்ட Tied Grant மானியம் ரூ.45.90-க்கு கீழ்காணும் விவரப்படி மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | இந்நகராட்சி பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவையான மின்கலனில் இயங்கும் (Battery Operated vehicle) வாகனம் 12 எண்ணம் விநியோகம் செய்தல் பணி | 24.00 |
| 2 | இந்நகராட்சி பொது சுகாதார பயன்பாட்டிற்கு தேவையான நான்கு சக்கர இலகுரக (Light commercial Vehicle) வர்த்தக வாகனம் 3 எண்ணம் விநியோகம் செய்தல் பணி | 21.90 |
| மொத்தம் | | 45.90 |

மேற்காணும் பணிகளுக்கு அனுமதி வழங்கப்பட்ட சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் உத்தரவின்படி, இந்நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு;

1. பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

2. இந்நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.464/2023/இ1)

**<u>தீர்மானம் எண்.332</u>**

- கடிதம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:5</u>**

காயல்பட்டினம் நகராட்சி பகுதிகளில் அரசு சிறப்பு திட்டத்தின் கீழ் சுமார் 3 கிலோ மீட்டர் நீளத்திற்கு புதியதாக திறந்த நிலையில் வடிகால்கள் & மூடியுடன் கூடிய கான்கீரிட் வடிகால்கள் (Construction of storm water Drain) (1) இரத்தினாபுரி முதல் மேல நெசவு தெரு ஓடை (2) சாகிப் தம்பி தோட்டம் முதல் நஞ்சட்டு ஓடை (3) மாட்டுகுளம் முதல் உப்பாத்து ஓடை ஆகிய இடங்களில் அமைக்கும் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு வடிகால்களின் கழிவு நீர் தேங்காமல் முறையாக Disposal செய்வதற்கு, Level எடுத்து நிலப்பரப்பு ஆய்வு செய்து Land Survey & Excel Sheet-ல் அளவீடுகள் பதிவு செய்து புகைப்படங்களுடன் அறிக்கைகள் பெற வேண்டிள்ளதால், இப்பணிக்கு விலைப்புள்ளி கோரவும், அதற்கான செலவினம் ரூ. 30,000/-க்கு அனுமதி வேண்டி, நகராட்சி பொறியாளரால் அறிக்கை செய்யப்பட்டுள்ளது இப்பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் ரூ.30,000/- மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.333</u>**

- நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனம் ரூ.30,000/- ஐ மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்: 6</u>**

நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் (NSMT Scheme 2022 - 2023) -ன்கீழ் காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் தற்சமயம் மிகவும் சேதமடைந்து காணப்படும் 41 எண்ணம் சாலைகள் 5.99 கி. மீட்டர் நீளத்திற்கு ரூ.190.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளும் பொருட்டு அரசாணை (D) எண்.192 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA3) துறை நாள்.31.03.2023-ன்படி, நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது மன்றத்தின் பார்வைக்கு முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு -

1. அரசாணையினை மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 274/2023/இ1)

**தீர்மானம் எண்.334**

- அரசாணை பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.
- அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்:7**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சமூக நலத்துறையின் மானிய கோரிக்கையின் போது அரசுப்பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கும் சிறப்பு திட்டத்தினை அறிவித்துள்ளதற்கிணங்க, இத்திட்டத்தினை உள்ளாட்சி அமைப்புகளில் செயல்படுத்துவதற்கு ஏதுவாக தோராய செலவினம் மற்றும் ஒருங்கிணைப்பு சமையற் கூடங்களுக்கான கட்டிடம், காலியிடம் கண்டறியப்பட்ட விவரங்கள் கோரப்பட்டு, ஒருங்கிணைப்பு மையத்தில் சமைக்கப்படும் உணவு பள்ளிக் குழந்தைகளுக்கு காலைச் சிற்றுண்டிக்காக முற்பகல் 7.30 மணியளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து பள்ளிகளையும் சென்றடையும் விதத்தில் உரிய வாகன வசதிகளும் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றும், புதியதாக கட்டிடம் கட்டுவது தொடர்பான பணிகளை உடனடியாக மேற்கொள்ளுமாறும் அல்லது பழைய கட்டிடத்தையே சமையற்கூடமாக பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டிருந்தால், உடனடியாக சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், ஒருங்கிணைப்பு சமையற் கூடங்கள் அமைப்பது, தொடர்பாக கீழ்காணும் உத்தேச அட்டவணையின்படி பணிகள் மேற்கொள்ளுமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் ந.க.எண்.17404/2022/எம்-1, நாள்.10.03.2023 -ந் தேதிய கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகள் | முடிக்கப்பட வேண்டிய தேதி |
|---|---|---|
| 1 | சமையற் கூடம் கட்டுவதற்கான நிலம் கண்டறிதழ் | 20.03.2023-ற்கு முன் |
| 2 | சமையற்கூடம் கட்டுவதற்கான ஒப்பந்தப்புள்ளி பிரசுரம் செய்யப்பட வேண்டிய தேதி | 23.03.2023-ற்கு பின் |
| 3 | ஒப்பந்தப்புள்ளி பெறப்பட வேண்டிய தேதி | 07.04.2023 |
| 4 | பணி ஆணை வழங்க வேண்டிய தேதி | 10.04.2023 |
| 5 | சமையற் கூடம் (கட்டிடம்) முடிக்கப்பட வேண்டிய தேதி | 15.05.2023 |

மேலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 20.03.2023-ந் தேதிய காணொலி ஆய்வுக் கூட்ட அறிவுரையின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

அவர்களின் “அரசுப் பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்கப்படும்” திட்டத்தினை (CMBFS) இந்நகராட்சியில் செயல்படுத்தும் விதமாக ஒருங்கிணைந்த சமையற் கூடம் அமைப்பதற்கான இடம் தேர்வு செய்து பணிகள் மேற்கொள்வதற்கு கீழ்கண்டவாறு மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ.எண் | பணியின் விபரம் | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.16, கருத்தம்பி மரைக்காயர் (KTM) தெருவில் அமைந்துள்ள துவக்கப்பள்ளியில் காலை சிற்றுண்டி வழங்குத் திட்டத்திற்கு ஒருங்கிணைந்த சமையற்கூடம் அமைக்கும் பணி | 20.00 |

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்திற்கான மேற்காணும் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு இப்பணிக்கு ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு;**

1. பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. இப்பணிக்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யும் பட்சத்தில் நகராட்சி நிதியை ஈடுசெய்து கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
4. இந்நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.454/2023/இ1)

**தீர்மானம் எண்.335**

- கடிதம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.
- ரூ.20.00 இலட்சம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:8**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவிப்பு (2023-2024) செய்வதற்கு ஏதுவாக தூத்துக்குடி மாவட்டத்தில் சுற்றுலா பயணிகளுக்கு தேவையான கருத்துருக்களை பெற்று வழங்கும்படி கோரப்பட்டுள்ளதன் அடிப்படையில், தூத்துக்குடி மாவட்டம் காயல்பட்டினம் கடற்கரை பகுதி

சுற்றுலாதலத்தில் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை புரிவதால் கடற்கரை பகுதியை அழகுபடுத்தவும், அங்கு வருகின்ற சுற்றுலா பயணிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து தருவதற்கும், அரசு வழிகாட்டுதல்கள் நெறிமுறையின்படி கருத்துரு, விரிவான திட்ட மதிப்பீடு பணிகள் செய்வதற்கு தேவையான இடத்தின் வரைபடம் (FMB Sketch புல எண் சர்வே எண் உள்பட) மற்றும் தடையின்மை சான்று ஆகியவற்றுடன் திட்ட மதிப்பீடுகள் (3 நகல்கள்) CD பதிவுடன் அனுப்பி வைக்குமாறு சுற்றுலா அலுவலர், மாவட்ட சுற்றுலா அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் - தூத்துக்குடி அவர்களின் கடித எண்.267/உசுஅ/தூடி/2022, நாள்.06.03.2023-ந் தேதிய கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு, பணிகளுக்கான மதிப்பீடுகள் தயாரித்து தருவதற்கு தனியார் ஆலோசகர் (Private Consultant) மூலம் அரசு வழிகாட்டுதல்கள் நெறிமுறையின்படி கருத்துரு, விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்வதற்கும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அனுமதி வேண்டி மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. பணியின் அவசர அவசியம் கருதி நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தனியார் ஆலோசகர் மூலம் அரசு வழிகாட்டுதல்கள் நெறிமுறையின்படி கருத்துரு, விரிவான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.426/2023/இ1)

**தீர்மானம் எண்.336**

- தனியார் ஆலோசகர் மூலம் விரிவான திட்ட முன் மொழிவுகள் தயார் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.
- நகராட்சி வருவாய் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்:9**

பிரதம மந்திரி ஜான்விகாஸ் காரியக்ராம் (PMJVK) திட்டம் 2022-2023-ன் கீழ் சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் பகுதியான காயல்பட்டினம் நகராட்சி பகுதிகளிள் மத்திய மற்றும் மாநில அரசின் நிதியுதவியுடன், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் வகையில் 2022 – 2023 ஆம் ஆண்டிற்கு தூத்துக்குடி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் 27.03.2023 அன்று பிற்பகல் 4.30 மணி அளவில் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருத்திய வழிகாட்டு நெறிமுறைகளின்படி, முன் மொழிவுகள் தயார் செய்வது குறித்து ஆய்வு செய்யப்பட்டது. மேற்காணும் ஆய்வு கூட்ட நடவடிக்கைகளில் காயல்பட்டினம் நகராட்சி பகுதியில் குடிநீர் வசதி, சாலை வசதிகள், (சூரிய ஒளி மூலம் பெரும் மின் விளக்கு வசதி உள்ள சாத்தியக்கூறு பகுதிகள், பாதாள சாக்காடை திட்டத்திற்கு திருத்திய முன் மொழிவுகள் (Details Project Report) அனுப்பி வைக்குமாறும், அதில் இடம் பெற வேண்டிய முக்கிய அம்சங்கள் குறித்து மாவட்ட பிற்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர்

அலுவலகம் தூத்துக்குடி ந.க.பிந4/135428/2022 நாள்.29.03.2023 -ந் தேதிய கடிதத்தின் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. திட்ட குறிப்புரையுடன் பயனடையும் சிறுபான்மையினர் மக்கள் எண்ணிக்கை. அவை தொடர்பான குறைந்த பட்சம் ஒரு பக்கம் அறிக்கை
2. நிலம் தொடர்பான மேற்படி குறிப்பிட்ட ஆவணங்கள்
3. திட்ட மதிப்பீடு (தேவைப்படும் இடங்களில் விரிவான அறிக்கை)
4. புகைப்படங்கள்

மேலும், திட்ட முன் மொழிவுகள் இரட்டை பிரதிகள் (மென்பொருள் வடிவில் தயார் செய்து இணையதளத்தில் பதிவேற்றம் செய்யும் வகையில் திருத்திய முன் மொழிவுகள் 15.04.2023-க்குள் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளும் பொருட்டு தனியார் ஆலோசகர் (Private Consultant) மூலம் திட்ட முன் மொழிவுகள் தயார் செய்வதற்கும், அதற்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் அனுமதி வேண்டி மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. பணியின் அவசர அவசியம் கருதி தனியார் ஆலோசகர் மூலம் விரிவான திட்ட முன் மொழிவுகள் தயார் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 752/2022/இ1)

**<u>தீர்மானம் எண்.337</u>**

- தனியார் ஆலோசகர் மூலம் விரிவான திட்ட முன் மொழிவுகள் தயார் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.
- நகராட்சி வருவாய் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்:10</u>**

தமிழ்நாடு சட்ட மன்ற அறிவிப்பு 2023 - 2024 மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண். 34 (7) -ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் குறைந்த பட்சம் ஒரு நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி செய்வதற்கு வெளியிடப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து காயல்பட்டினம் நகராட்சி எதிர் வரும் காலங்களில் மக்கள் தொகை பெருக்கத்தினை கருத்தில் கொண்டு சுற்றுச்சூழல் மாசு மற்றும் பொது சுகாதார நலன் கருதியும், புதியதாக நவீன எரிவாயு தகனமேடை அமைக்கும் பணி செய்வதற்குரிய திட்ட முன் மொழிவுகள் தயார் செய்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்கு தனியார் ஆலோசகர் (Private Consultant) மூலம் திட்ட முன் மொழிவுகள் தயார் செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிக்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய்

நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. பணியின் அவசர அவசியம் கருதி தனியார் ஆலோசகர் மூலம் விரிவான திட்ட முன் மொழிவுகள் தயார் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
3. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்ககலாம்.

(கோப்பு எண். 481/2023/இ1)

**<u>தீர்மானம் எண்.338</u>**

- தனியார் ஆலோசகர் மூலம் விரிவான திட்ட முன் மொழிவுகள் தயார் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி வருவாய் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:11</u>**

தமிழ்நாடு சட்ட மன்ற அறிவிப்பு 2023 - 2024 மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண். 34 (6) ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பேருந்து நிலையங்கள் மேம்படுத்துவதற்கு வெளியிடப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து காயல்பட்டினம் நகராட்சி "D" வகை பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேல் ஆவதால், பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பேருந்து நிலையம் தரம் உயர்த்தி நவீன வசதிகளுடன் பேருந்து நிலையத்தை மேம்படுத்தும் பணி செய்வதற்குரிய திட்ட முன் மொழிவுகள் தயார் செய்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்கு தனியார் ஆலோசகர் (Private Consultant) மூலம் திட்ட முன் மொழிவுகள் தயார் செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிக்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. பணியின் அவசர அவசியம் கருதி தனியார் ஆலோசகர் மூலம் விரிவான திட்ட முன் மொழிவுகள் தயார் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

3. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்ககலாம்.

(கோப்பு எண். 477 /2023/இ1 )

**<u>தீர்மானம் எண்.339</u>**

- தனியார் ஆலோசகர் மூலம் விரிவான திட்ட முன் மொழிவுகள் தயார் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி வருவாய் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:12</u>**

தமிழ்நாடு சட்ட மன்ற அறிவிப்பு 2023 - 2024 மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண். 34 (13)-புதிய சந்தைகள் அமைப்பதற்கு வெளியிடப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து காயல்பட்டினம் நகராட்சியில் தற்போது செயல்பட்டு வரும் மார்க்கெட் கடைகள் மிகவும் குறுகலாகவும், பொதுமக்களுக்கும், வியாபாரிகளுக்கும், அடிப்படை வசதிகள் இன்றி, மிகவும் பழுதடைந்து ஆபத்து விளைவிக்கும் வகையில் இருப்பதால் பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப புதியதாக தினசரி சந்தை ஒன்று அமைப்பதற்கு திட்ட முன் மொழிவுகள் தயார் செய்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு சமர்ப்பிப்பதற்கு தனியார் ஆலோசகர் (Private Consultant) மூலம் திட்ட முன் மொழிவுகள் தயார் செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பணிக்குரிய செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. பணியின் அவசர அவசியம் கருதி தனியார் ஆலோசகர் மூலம் விரிவான திட்ட முன் மொழிவுகள் தயார் செய்வதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
3. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்ககலாம்.

(கோப்பு எண். 478 /2023/இ1 )

**<u>தீர்மானம் எண்.340</u>**

- தனியார் ஆலோசகர் மூலம் விரிவான திட்ட முன் மொழிவுகள் தயார் செய்வதற்கு அனுமதிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி வருவாய் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்படுகிறது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:13</u>**

காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட திடக்கழிவு மேலாண்மை (SWM) திட்டத்தினை செயல்படுத்த சேவை வழங்குநர் / முகவர் / ஒப்பந்ததாரர் தேர்வு செய்து தூய்மை பணியாளர்கள் மற்றும் வாகனங்களை பயன்படுத்தி குப்பைகள் உருவாகும் இடங்களிலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து சேகரம் செய்யும் வெளிக்கொணர்வு முகமை (Out Sourcing) பணி ரூ.264.95 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.32945/2022/EA2-SWM-11 நாள். 10.01.2023-ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை தொடர்ந்து இந்நகர்மன்ற தீர்மான எண். 258 நாள்.20.01.2023-ன்படி, அனுமதி பெற்று மேற்காணும் பணிக்குரிய ஒப்பந்த ஆவணத்திற்கு (Bid Document) தலைமை பொறியாளர், சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநரகம் அவர்களின் கடிதம் ந.க.எண்.001/2022/DO1 நாள்.02.02.2023-ன்படி, அனுமதி பெற்று 24.03.2023 அன்று மாநில அளவில் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு, மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் மின்னனு முறையில் வரப்பெற்றுள்ளது.

1. M/s. K. R கன்ஸ்ட்ரக்ஷன்,
   73, மணல்மேடு,
   தென்திருப்பேரை
   தூத்துக்குடி - 628 623

2. S.K. செல்வி,
   ஒப்பந்ததாரர்,
   73/9E/3, போல்பேட்டை,
   தூத்துக்குடி 628 002

3. M/s. ஹவர்லேண்ட் இன்ஜ்னியரிங் வோர்க்ஸ் பிரைவேட் லிமிட்,
   70/1, அன்ஜீகம் நகர் 3வது தெரு,
   டவர்கன்பேட்
   சென்னை -83

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள மூன்று ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் மூன்று ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதியானதாக உள்ளதால் மூன்று ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை 20.04.2023 அன்று மின்னனு முறையில் திறக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்பு நோக்கு பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. M/s. K. R கன்ஸ்ட்ரக்ஷன்,<br>73, மணல்மேடு,<br>தென்திருப்பேரை<br>தூத்துக்குடி - 628 623 | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட<br>2.64 % குறைவு |

| | |
|---|---|
| 2. S.K. செல்வி,<br>ஒப்பந்ததாரர்,<br>73/9E/3, போல்பேட்டை,<br>தூத்துக்குடி 628 002 | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட<br>2.61 % குறைவு |
| 3. M/s. ஹவர்லேண்ட் இன்ஜ்னியரிங் வோர்க்ஸ் பிரைவேட் லிமிட்,<br>70/1, அன்ஜீகம் நகர் 3வது தெரு,<br>டவர்கன்பேட்<br>சென்னை -83 | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட<br>0.011 % குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. K. R கன்ஸ்ட்ரக்ஷன், 73, மணல்மேடு, தென்திருப்பேரை என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது

அலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண்.1326/2022/எச்1)

**தீர்மானம் எண்.341**

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:14**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 17404/2022/எம்-1, நாள்.10.03.2023 மற்றும் 20.03.2023-ந் தேதிய காணொலி கூட்ட அறிவுரையின்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அரசு பள்ளிகளில் ஒன்றாம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு காலை சிற்றுண்டி வழங்குவதற்குரிய திட்டத்தினை (CMBFS) செயல்படுத்தும் விதமாக காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 16, கருத்தம்பி மரைக்காயர் (KTM) தெருவில் அமைந்துள்ள துவக்கப்பள்ளியில் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்திற்கான ஒருங்கிணைந்த சமையற்கூடம் ரூ.20.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணி மேற்கொள்வதற்கு 06.04.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. திரு. T. மாதவன், ஒப்பந்ததாரர், ஓடக்கரை, காயல்பட்டினம் — மதிப்பீடு ரேட்டை விட 0.07 % குறைவு
2. திரு. R. தலவாணிமுத்து, ஒப்பந்ததாரர், 38, பூந்தோட்டம், காயல்பட்டினம் — மதிப்பீடு ரேட்டை விட 2.54 % கூடுதல்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல்படி, மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. T. மாதவன், ஓடக்கரை, காயல்பட்டினம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 454/2023/இ1)

**<u>தீர்மானம் எண்.342</u>**

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:15</u>**

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.35132/2022/CFC-1 நாள்.12.10.2022-ந் தேதிய அனுமதி மற்றும் இந்நகர்மன்ற தீர்மான எண். 235 நாள்.29.12.2022-ன்படி, 15-வது நிதிக்குழு திட்டம் 2022- 2023-ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் புதியதாக ஒரு நகர்புற சுகாதார மற்றும் ஆரோக்கிய மையம் (U-HWCs) கட்டும் பணிக்கு ரூ.25.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 05.04.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. திரு. K. சுந்தரபாண்டியன், த/பெ. கிருஷ்ணன், அரசு ஒப்பந்ததாரர், 20,21 -வாலன் தெரு, புளியங்குடி — மதிப்பீடு ரேட்டை விட 0.038 % குறைவு

2. திரு. S. ராமர் பாண்டியன்,
த/பெ. சுந்தர பாண்டியன்,
20,21 -வாலன் தெரு,
புளியங்குடி

மதிப்பீடு ரேட்டை விட 1.57 % கூடுதல்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல்படி, மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. K. சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், புளியங்குடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 1192/2022/இ1)

**தீர்மானம் எண்.343**

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:16**

நமக்கு நாமே திட்டம் 2022 – 2023 -ன் கீழ் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.8880-2/2022/P1 நாள். 06.03.2023 -ந் தேதிய அனுமதிக்கிணங்க, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.567/2023/ஆ1 நாள்.16.03.2023-ன்படி, நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட புதிய பேருந்து நிலைய வளாகத்தில் மேல்நிலை நீர் தேக்க தொட்டி பணியாளர் ஓய்வு அறை அமைக்கும் பணி ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 05.04.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. திரு. K. சுந்தரபாண்டியன்,
த/பெ. கிருஷ்ணன்,
அரசு ஒப்பந்ததாரர்,
20,21 -வாலன் தெரு,
புளியங்குடி

மதிப்பீடு ரேட்டை விட 0.0001 % கூடுதல்

2. திரு. S. ராமர் பாண்டியன், த/பெ. சுந்தர பாண்டியன், 20,21 -வாலன் தெரு, புளியங்குடி — மதிப்பீடு ரேட்டை விட 0.40 % குறைவு

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. S. ராமர் பாண்டியன், ஒப்பந்ததாரர், புளியங்குடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 276/2023/இ1)

**<u>தீர்மானம் எண்.344</u>**

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:17</u>**

நமக்கு நாமே திட்டம் 2022 – 2023 -ன் கீழ் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.8880-2/2022/P1 நாள். 06.03.2023 -ந் தேதிய அனுமதிக்கிணங்க, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.567/2023/ஆ1 நாள்.16.03.2023-ன்படி, நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட அலுவலக வளாகத்தில் பொதுமக்களுக்கு நிழற்குடை அமைக்கும் பணி ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 05.04.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. K. சுந்தரபாண்டியன்,<br>த/பெ. கிருஷ்ணன்,<br>அரசு ஒப்பந்ததாரர்,<br>20,21 -வாலன் தெரு,<br>புளியங்குடி | மதிப்பீடு ரேட்டை விட 0.0001 %<br>கூடுதல் |
| 2. | திரு. S. ராமர் பாண்டியன்,<br>த/பெ. சுந்தர பாண்டியன்,<br>20,21 -வாலன் தெரு,<br>புளியங்குடி | மதிப்பீடு ரேட்டை விட 0.40 %<br>குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. S. ராமர் பாண்டியன், ஒப்பந்ததாரர், புளியங்குடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 276/2023/இ1)

**<u>தீர்மானம் எண்.345</u>**

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:18</u>**

நமக்கு நாமே திட்டம் 2022 – 2023 -ன் கீழ் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.8880-2/2022/P1 நாள். 06.03.2023 -ந் தேதிய அனுமதிக்கிணங்க, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.567/2023/ஆ1 நாள்.16.03.2023-ன்படி, நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, காயல்பட்டினம் நகராட்சிக்குட்பட்ட சிவன் கோவில் தெருவில் கட்டப்பட்டுள்ள நுண் உரக்குடிலை சுற்றி சுற்று சுவர் அமைக்கும் பணி ரூ.22.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 05.04.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. K. சுந்தரபாண்டியன்,<br>த/பெ. கிருஷ்ணன்,<br>அரசு ஒப்பந்ததாரர்,<br>20,21 -வாலன் தெரு,<br>புளியங்குடி | மதிப்பீடு ரேட்டை விட 0.30 %<br>குறைவு |
| 2. | திரு. S. ராமர் பாண்டியன்,<br>த/பெ. சுந்தர பாண்டியன்,<br>20,21 -வாலன் தெரு,<br>புளியங்குடி | மதிப்பீடு ரேட்டை விட 0.01 %<br>கூடுதல் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. K. சுந்தரபாண்டியன், ஒப்பந்ததாரர், புளியங்குடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின்

முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 276/2023/இ1)

**தீர்மானம் எண்.346**

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**பொருள் எண்:19**

நமக்கு நாமே திட்டம் 2022 – 2023 -ன் கீழ் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.8880-2/2022/P1 நாள். 06.03.2023 -ந் தேதிய அனுமதிக்கிணங்க, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.567/2023/ஆ1 நாள்.16.03.2023-ன்படி, நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி, நகராட்சிக்குட்பட்ட சிவன் கோவில் தெருவில் கட்டப்பட்டுள்ள நுண் உரக்குடில் வளாகத்தில் நிழற்குடை அமைக்கும் பணி ரூ.7.50 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 05.04.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. K. சுந்தரபாண்டியன்,<br>த/பெ. கிருஷ்ணன்,<br>அரசு ஒப்பந்ததாரர்,<br>20,21 -வாலன் தெரு,<br>புளியங்குடி | மதிப்பீடு ரேட்டை விட 0.0001 % கூடுதல் |
| 2. | திரு. S. ராமர் பாண்டியன்,<br>த/பெ. சுந்தர பாண்டியன்,<br>20,21 -வாலன் தெரு,<br>புளியங்குடி | மதிப்பீடு ரேட்டை விட 0.40 % குறைவு |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. S. ராமர் பாண்டியன், ஒப்பந்ததாரர், புளியங்குடி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.

2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 276/2023/இ1)

**<u>தீர்மானம் எண்.347</u>**

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**<u>பொருள் எண்:20</u>**

நமக்கு நாமே திட்டம் 2022 – 2023 -ன் கீழ் பணிகள் மேற்கொள்ளும் பொருட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடிதம் ந.க.எண்.8880/2022/P1 நாள்.13.02.2023 -ந் தேதிய அனுமதிக்கிணங்க, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.567/2023/ஆ1 நாள்.14.02.2023-ன்படி, நிர்வாக அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி,காயல்பட்டினம் நகராட்சி பைபாஸ் சாலையில் சூரிய விளக்குகள் (Solar Lights) அமைக்கும் பணி ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 30.03.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீகங்கா எலக்ட்டிரிக்கல்ஸ்,<br>1394/1A, சிவசக்தி தியேட்டர் ரோடு,<br>ஸ்ரீபுரம்,<br>திருநெல்வேலி - 627 001<br>செல். 9443384427 | மதிப்பீடு ரேட்டை விட 0.05 % குறைவு |
| 2. | ஸ்ரீகுகன் எண்டர்பிரைசஸ்,<br>8/1C-1 , திருச்செந்தூர் மெயின் ரோடு,<br>ஆதிபராசக்தி நகர்,<br>கிருஷ்ணாபுரம்,<br>திருநெல்வேலி - 627 011 | மதிப்பீடு ரேட்டை விட 3.06 % அதிகம் |

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஸ்ரீகங்கா எலக்ட்டிரிக்கல்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 276/2023/இ1)

**<u>தீர்மானம் எண்.348</u>**

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**<u>பொருள் எண்:21</u>**

அரசாணை (MS) எண்.7 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (MA2) துறை நாள்.20.01.2023-ன்படி, அம்ருத் 2.0 (Tranche-II) 2022-2023-ஆம் ஆண்டு திட்ட நிதியின் கீழ் காயல்பட்டினம் நகராட்சியில் கோமான் புதூர் சர்வே எண்.373-ல் பூங்கா அமைத்திடும் பணி ரூ.28.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 13.03.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. திரு. எஸ். வித்யாசகர்,
   எண் :14/5A, நடுவக்குறிச்சி,
   சாத்தான்குளம் தாலுகா 628 653
   தூத்துக்குடி மாவட்டம்

2. M/s. தேஜா ஸ்டேக்,
   எண்:1/243-11 ஸ்ரீகிருஷ்ணாநகர்,
   மேல திருச்செந்தூர்.
   திருச்செந்தூர்

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் தொழில்நுட்ப ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் தகுதியானதாக உள்ளதால் இரண்டு ஒப்பந்ததாரர்களின் விலைப்புள்ளி உறை மின்னனு முறையில் திறக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஒப்புநோக்குப் பட்டியல் (முதல் விலைக்குறைப்பு சம்மதக்கடிதத்தின்படி) தயாரிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | திரு. எஸ். வித்யாசகர்,<br>எண் :14/5A, நடுவக்குறிச்சி,<br>சாத்தான்குளம் தாலுகா 628 653<br>தூத்துக்குடி மாவட்டம் | மதிப்பீடு ரேட்டை விட 0.15 %<br>குறைவு |
| 2. | M/s. தேஜா ஸ்டேக்,<br>எண்:1/243-11 ஸ்ரீகிருஷ்ணாநகர்,<br>மேல திருச்செந்தூர்.<br>திருச்செந்தூர் | மதிப்பீடு ரேட்டை விட 6.08 %<br>கூடுதல் |

மேற்கண்டவாறு உள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு. எஸ். வித்யாசகர், நடுவக்குறிச்சி, சாத்தான்குளம் என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(கோப்பு எண். 698/2022/இ1)

**தீர்மானம் எண்.349**

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**பொருள் எண்:22**

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ2/9566/2022 நாள்.13.02.2023-ன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022-23-ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சி, கற்புடையார் பள்ளி வட்டம் (சிங்கித்துறை) மையானம் செல்லும் பாதையில் சிறுபாலம் அமைக்கும் பணி ரூ.9.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 30.03.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. M/s. தேஜா ஸ்டேக்,
   எண்:1/243-11 ஸ்ரீகிருஷ்ணாநகர்,
   மேல திருச்செந்தூர்.
   திருச்செந்தூர்
2. M/s. ஸ்ரீஅன்கோ,
   சந்தை எடியூர்,
   உடன்குடி

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளி உறைகள் மின்னனு முறையில் திறக்கப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதில் ஒப்பந்ததாரரால் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட கூடுதல் விலைவிகிதம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து ஒப்பந்ததாரரின் முதல் விலைகுறைப்பு சம்மத கடிதத்தின்படி, கீழ்காணும் விபரப்படி, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | M/s. தேஜா ஸ்டேக்,<br>எண்:1/243-11 ஸ்ரீகிருஷ்ணாநகர்,<br>மேல திருச்செந்தூர்.<br>திருச்செந்தூர் | மதிப்பீடு ரேட்டை விட 7.02 % கூடுதல் |
| 2. | M/s. ஸ்ரீஅன்கோ,<br>சந்தை எடியூர்,<br>உடன்குடி | மதிப்பீடு ரேட்டை விட 0.05 % குறைவு |

மேற்கண்டவாறு உள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஸ்ரீஅன்கோ, உடன்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண். 1079/2022/இ1)**

**தீர்மானம் எண்.350**

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**பொருள் எண்:23**

மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை தூத்துக்குடி அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். அ2/9566/2022 நாள்.13.02.2023-ன்படி, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2022-23-ன் கீழ் காயல்பட்டினம் நகராட்சி, ஓடக்கரையில் நியாயவிலைக் கடை கட்டிடம் அமைக்கும் பணி ரூ. 20.00 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 30.03.2023 அன்று மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

1. M/s. தேஜா ஸ்டேக்,
   எண்:1/243-11 ஸ்ரீகிருஷ்ணாநகர்,
   மேல திருச்செந்தூர்.
   திருச்செந்தூர்

2. M/s. ஸ்ரீஅன்கோ,
   சந்தை எடியூர்,
   உடன்குடி

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்புள்ளி உறைகள் மின்னனு முறையில் திறக்கப்பட்டு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்யப்பட்டதில் ஒப்பந்ததாரரால் மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிட கூடுதல் விலைவிகிதம் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை தொடர்ந்து ஒப்பந்ததாரரின் முதல் விலைகுறைப்பு சம்மத கடிதத்தின்படி, கீழ்காணும் விபரப்படி, ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டுள்ளது.

1. M/s. தேஜா ஸ்டேக்,
எண்:1/243-11 ஸ்ரீகிருஷ்ணாநகர்,
மேல திருச்செந்தூர்.
திருச்செந்தூர்
— மதிப்பீடு ரேட்டை விட 8.41 % கூடுதல்

2. M/s. ஸ்ரீஅன்கோ,
சந்தை எடியூர்,
உடன்குடி
— மதிப்பீடு ரேட்டை விட 0.12 % குறைவு

மேற்கண்டவாறு வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீடு ரேட்டை விட குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. ஸ்ரீஅன்கோ, உடன்குடி என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை நகர்மன்றம் அங்கீகரிக்கலாம். பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

அுலுவலக குறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(கோப்பு எண். 1079/2022/இ1)**

**<u>தீர்மானம் எண்.351</u>**

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது

**<u>பொருள் எண்:24</u>**

காயல்பட்டினம் நகராட்சியில் இரண்டு கணினி வசூல் மையங்கள் செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி வரி வசூல் மையத்தில் பணத்தை இலகுவாக பாதுகாப்பு முறையில் கையாளும் வகையிலும், இந்நகராட்சி கணினி வரி வசூல் மையத்தில் பணம் எண்ணுவதற்கும், கள்ள நோட்டுகளை கண்டறிவதற்கும், பணம் எண்ணும் இயந்திரம் ஒரு எண்ணம் தேவைப்படுவதாக இந்நகராட்சி வருவாய் ஆய்வாளரால் 06.03.2023-ந் தேதி அறிக்கை செய்யப்பட்டுள்ளது . **அதன்படி** பணம் எண்ணும் இயந்திரம் (Automatic mix Note value counting Machine) ஒரு எண்ணம் **விநியோகம் செய்யும் பொருட்டு** 20.03.2023-**ந் தேதி விலைப் புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படியான மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது**. **மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது**.

| வ.எண் | ஒப்பந்தகாரர் / நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | LUFTCARE SOLUTIONS<br>77A, JJ KHAN ROAD,<br>ROYAPETTAI, | 13,500/- |

| | | |
|---|---|---|
| | CHENNAI - 600 014 | |
| 2 | SHIFAN TRADING,<br>48/39, RAJAJI SALAI,<br>CHENNAI - 600 014 | 14,200/- |
| 3 | SB ASSOCIATES<br>A.K. COMPLEX, 1$^{ST}$ FLOOR, MAIN ROAD, KAYALPATTINAM | 14,800/- |

மேற்கண்டவாறு வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகளில் சரக்கு மற்றும் சேவை வரி (G.S.T) உட்பட ரூ.13,500/-க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. LUFTCARE SOLUTIONS, CHENNAI என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம். நிர்வாக நலனை கருத்தில் கொண்டு நகர்மன்ற அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. ரூ.13,500/-க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள M/s. LUFTCARE SOLUTIONS, CHENNAI என்ற நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.352</u>**

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.
- நகராட்சி வருவாய் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:25</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் ஆய்வுகூட்டங்கள் பெரும்பாலும் வீடியோ கான்பிரன்ஸ் மூலம்

நடத்தப்படுகிறது. ஆய்வு கூட்டங்கள் நடைபெறும் போது, BSNL வழிதடத்தின் வழியாக இவ்வலுவலகத்தில் இயங்கி வரும் FiberNet அடிக்கடி தடங்கல் ஏற்பட்டு ஆய்வுகூட்டங்களில் பதில் வழங்காத நிலையில் சிரமம் ஏற்படுகிறது. எனவே, மேற்படி தடங்கல்கள் ஏற்படாத வண்ணம் வீடியோ கான்பிரன்ஸ்க்கு மட்டும் தனியாக **THAMIZHAGA INTERNET COMMUNICATIONS PVT LTD, மூலம் FIBER INTERNET CABLE** இணைப்பு உடனடியாக பெறுவதற்கு ஆணையாளர் அவர்கள் தெரிவித்துள்ளபடியால், பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அங்கீகரிக்கலாம்

**<u>தீர்மானம் எண்.353</u>**

- அனுமதிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:26</u>**

காயல்பட்டினம் நகராட்சி TN69U9148 **ஈப்பு வாகனத்தில்** (1) **லைனர் ஒரிங் செட்**, (2) **மேரில் கேஸ்கட்**, (3) **வால்வு கேடில்ஸ்**, (4) **டெம்ரில்**,(5) **ரிங்செட்**, (6) **ஏர்பில்டர் சர்வீஸ்**, (7) **ஜாயிண்ட் கிராஸ் லைனிங்**, (8) **இன்ஜின் ஆயில் சேஞ்**, (9) **ரேடியேட்டர் ஆயில் சேஞ்**, (10) **ஆயில் பில்டர் சேஞ்**, (11) **ஸ்டேரிங் டைட் பால்ஜாயின்ட் மெயின் பேலன்ஸ் ராட்**, (12) **ரேடியேட்டர் கோர் சர்வீஸ்**, (13) **பிரேக்** 4 **வீல் கிரிஸ் பேக்கிங்**, (14) **எலக்ட்ரிக்கல் சர்வீஸ்** (15) **ஜெனரல் செக்கப் சர்வீஸ்**, (16) **வயரிங்கிட் சர்வீஸ்**, **மற்றும்** (17) **வாட்டர் வாஸ் சர்வீஸ் ஆகிய பழுது நீக்க பணிகள் செய்து தருமாறு இவ்வலுவலக** (மா.ப) **ஈப்பு ஓட்டுநரால் கோரப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை உடனடியாக சரிசெய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு** 17.04.2023 **தேதி விலைப் புள்ளி கோரப்பட்டதில் ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்வதற்கு சரக்கு மற்றும் சேவை வரி** (G.S.T) **சேர்த்து வரப்பெற்றுள்ள கீழ்க்காணும் விவரப்படியான மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது**.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | விலையின் விகிதம் |
| --- | --- | --- |

| | | |
|---|---|---|
| 1 | நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ்,<br>21, அசோக் நகர் எக்ஸ்டேன்சன்,<br>புவனேஸ்வரி காலனி,<br>பாளையம்கோட்டை தாலுகா,<br>திருநெல்வேலி.627 007 | ரூ. 74,169/-<br>**வரிகள் உட்பட** |
| 2 | **ஜெனரல் மோட்டர்ஸ்**,<br>5/2, **சாந்தி நகர்**,<br>**பாளையம் கோட்டை**<br>திருநெல்வேலி.627 002 | **ரூ**.75,705/-<br>**வரிகள் உட்பட** |
| 3 | **சுந்தரம் மோட்டார்ஸ்**,<br>140 **அசோக் நகர் எக்ஸ்டேன்சன்**,<br>**பெருமாள்புரம்** (**போஸ்ட்**)<br>**திருநெல்வேலி** 627 007 | **ரூ**. 75,775/-<br>**வரிகள் உட்பட** |

இந்நகராட்சி ஈப்பு வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்வதற்கு சரக்கு மற்றும் சேவை வரி (G.S.T) உட்பட ரூ.74,169/-க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ், திருநெல்வேலி. விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம். அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு ஈப்பு வாகனம் பழுது நீக்க பணிகள் மேற்கொள்வதற்கும், பணி உத்திரவு வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. ஈப்பு வாகனம் பழுது நீக்கம் செய்வதற்கு ரூ74,169/-க்கு குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள நியூ ஸ்டார் ஆட்டோ மொபைல்ஸ், திருநெல்வேலி. நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்வதற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.556/2022/இ1)

**<u>தீர்மானம் எண்.354</u>**

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.
- நகராட்சி வருவாய் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்:27</u>**

கடந்த 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998-க்கு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, 13.04.2023 முதல் தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சி விதிகள் 2023 நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாடு நகர்புற உள்ளாட்சிகள் சட்டம் 1998, பிரிவு 84(1)ல் தெரிவித்துள்ளவாறு, சொத்து உரிமையாளர்கள் தங்களது 2023-24 ஆம்ஆண்டின் முதல் அரையாண்டிற்கான சொத்துவரியினை ஏப்ரல் 30 ஆம் தேதிக்குள் செலுத்தும் உரிமைதாரர்கள் சொத்துவரித் தொகையில் 5% ஊக்கத் தொகை அதிக பட்சமாக ரூ.5000/- வரை பெற தகுதியுடைவர்கள் ஆகிறார்கள். அதன்படி,

காயல்பட்டினம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சொத்து உரிமையாளர்கள் தங்களது சொத்துவரியினை ஏப்ரல் 30-க்குள் செலுத்தி நிகர சொத்துவரித்தொகையில் 5% ஊக்கத் தொகை அதிகபட்சமாக ரூ.5000/- வரை பெற்றுக் கொள்ளலாம் என்ற விபரத்தினை பொதுமக்களுக்கு தெரிவித்திடும் பொருட்டு, நகரின் முக்கிய இடங்களில் விளம்பர பலகை அமைத்தல், வரிவிதிப்புதாரர்களுக்கு வீடுவீடாக சென்று அறிவிப்பு வழங்குதல் போன்ற பணிகளை மேற்கொள்ளவதற்கு உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கு நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெறப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மன்றத்தின் முன் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. உத்தேச செலவினம் ரூ.20,000/-க்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 417/2022/அ2)

**<u>தீர்மானம் எண்.355</u>**

- நகராட்சி வருவாய் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:28</u>**

காயல்பட்டினம் நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலைய உள் மற்றும் வெளிப்புற கடைகளுக்கு அரசாணை (நிலை)எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.03.09.2007-ன்படி, இந்நகராட்சி கடைகளுக்கு 2023-2024 முதல் 2031-2032ம் ஆண்டு வரை ( 01.04.2023 முதல் 31.03.2032) ஒன்பது ஆண்டுகளுக்கு உரிமம் வழங்குவதற்குரிய ஒப்பந்தப்புள்ளிகள் 12.04.2023 ஆம் நாள் புதன் கிழமை காலை 11.00 மணி வரையிலும், அன்றைய தினம் 11.30 மணிக்கு பொது ஏலமும் நடைபெறுவதாக இவ்வலுவலக ந.க.எண். 337/2023/அ2 , நாள்.23.03.2023 -ந் தேதிய பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி விளம்பர அறிவிக்கை 28.03.2023-ந் தேதிய தினமலர் செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதற்குரிய விளம்பர கட்டணம் ரூ.18,522/- ஐ வழங்க கோரி பட்டியல் எண். TC5723 நாள். 28.03.2023 -ன்படியானது வரப்பெற்றுள்ளது. மேற்காணும் விவரப்படியான விளம்பர கட்டண இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து விளம்பர கட்டணம் ரூ.18,522/- மட்டும் வழங்குவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.337/2023/அ2)

**<u>தீர்மானம் எண்.356</u>**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்:29**

அ). இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணினி மற்றும் லேப்டாப்களின் பாதுகாப்புக்காக ஏற்கனவே ஓராண்டு Anti Virus Software போடப்பட்டு மேற்காணும் மென் பொருளின் காலம் 12.05.2023 ஆம் தேதியுடன் முடிவடைகிறது. ஆகையால் 2023 – 2024 ஆம் ஆண்டிற்கு இந்நகராட்சி கணினிகளின் பாதுகாப்புக் கருதி ஓராண்டு காலத்திற்கு கணினிகளை பாதுகாப்பு பணிகள் மேற்கொள்வதற்கு Anti Virus software மென்பொருள் வாங்கிட தகுதி வாய்ந்த நிறுவனங்கள் மூலம் விலைப்புள்ளி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொள்ளவும் அதற்கான செலவு தொகையினை பொது நிதியின் கீழ் வழங்கிடவும் மன்றத்தின் பார்வைக்கு முன் வைக்கப்படுகிறது.

ஆ) இந்நகராட்சி பொதுப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் ஜெராக்ஸ் & பிரிண்டிங் மிஷின்-ல் பழுது ஏற்பட்டுள்ளதால் அவற்றை பழுது நீக்கம் செய்யவும் ஜெராக்ஸ் மிஷின் பாதுகாப்பு கருதி 2023 – 2024 ஆம் ஆண்டிற்கு பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கு தகுதி வாய்ந்த canon நிறுவனங்கள் மூலம் உரிய நடவடிக்கை மேற்கொள்ளவதற்கு அதற்கான செலவுத் தொகையினை பொது நிதியின் கீழ் வழங்கிடவும் மன்றத்தின் பார்வைக்கு முன் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. Canon நிறுவனம் மூலம் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. இந்நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.997/2015/அ1)

**தீர்மானம் எண்.357**

- பணிகள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.
- நகராட்சி வருவாய் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்:30**

காயல்பட்டணம் நகராட்சி பகுதி புல எண்.754/27 கதவு எண். 29/3ஏ1 சின்ன நெசவு தெருவில் நகராட்சியினால் கட்டிட அனுமதி பெறாமல் திருப்பி அனுப்பப்பட்ட மனையில் திருமதி.ஆசியாபேகம் க/பெ. முகம்மது யூசுபு என்பவரால், கட்டப்பட்ட குடியிருப்பு மற்றும் வணிகவளாகத்தினை அகற்றிட தெரிவித்து பல அறிவிப்புகள் வழங்கியும் நடவடிக்கை ஏதும் எடுக்கப்படாததால், நகராட்சியினால் அகற்றுதல் / பூட்டி முத்திரையிடுதல் தொடர்பாக வழங்கப்பட்ட இறுதி அறிவிப்பினை எதிர்த்து, மேற்படி நபரால் சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண். WP (MD) No. 7565/2023க்கு நகராட்சி சார்பாக ஆஜராகிய வகைக்கு திரு.வி.நிர்மல்குமார், அரசு வழக்கறிஞர் என்பவருக்கு வழக்கு மற்றும் இதர கட்டணமாக தொகை ரூ.12500/– னை நகராட்சி வருவாய் பொது நிதியில் இருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு – அனுமதி வழங்கலாம்.

(கோப்பு எண். 441/2020/எப்.1)

**தீர்மானம் எண்.358**

அனுமதிக்கப்பட்டது.

**பொருள் எண்:31**

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் தெரு நாய்களினால் பல்வேறு பிரச்சனைகள் ஏற்பட்டு பல்வேறு புகார்கள் வரப்பெற்றுள்ளது. இதனை தொடர்ந்து இந்நகர் பகுதிகளில் தெரு நாய்கள் கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறி நோய் தடுப்பூசி போடுதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள தேசிய பிராணிகள் நல வாரியத்தின் அனுமதி பெற்ற ராஜேஸ்வரி கௌசாலா டிரஸ்ட் மூலம் தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறி நோய் தடுப்பூசி போடும் பணியினை நடத்துவதற்கும் மன்ற அனுமதி பெறப்பட்டு 2 கட்டங்களாக 392 தெரு நாய்களுக்கு கருத்தடை அறுவை சிகிச்சை மற்றும் வெறி நோய் தடுப்பூசி போடும் பணி முடிவுற்றுள்ளது. தற்போது 3ம் கட்டமாக 207 நாய்களுக்கு மேற்படி பணிக்காக செலவு தொகை ரூ.1,44,900/– க்கு பட்டியல் பெறப்பட்டு, சுகாதார ஆய்வாளரால் பரிந்துரை செய்யப்பட்டு, நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு, நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்க வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–

1. இந்நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 1166/2020/அ4)

**தீர்மானம் எண்.359**

நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றத்தால் அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:32**

காயல்பட்டணம் நகராட்சியில் டெங்கு மற்றும் தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்காக தற்சமயம் நகராட்சி பகுதிகளில் 14542 வீடுகள் உள்ளதால், அனைத்து வீடுகளுக்கும் சென்று மேற்படி பணியினை செய்வதற்காக, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.2751/2017/ஜே1 நாள் 23.01.2018–ன்படி, 300 வீடுகளுக்கு ஒரு நபர் வீதம் 48 நபர்களுக்கும், மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் உத்தரவில் கண்டுள்ள தினக்கூலி விகிதத்தில் ஊதியம் வழங்கிடவும், 48 டெங்கு ஒழிப்பு பணிகளை தன்னார்வு தொண்டு நிறுவனம் மூலம் செயல்படுத்துவதற்காக, இவ்வலுவலக துப்புரவு ஆய்வாளரால் 15.02.2023 அன்று வழங்கப்பட்ட குறிப்பின் அடிப்படையில், 28.02.2023–ம் தேதிய மன்ற கூட்டத்தில், மன்ற அனுமதி எண். 300–ன்படி, அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்பிரகாரம், ஸ்ரீமுத்தையா நினைவு அறக்கட்டளை, சென்னை, என்ஏஎம்டி ஸ்கில்ஸ் பிரைவேட் லிட், சென்னை மற்றும் டெக்மைன்ட்ஸ் கல்வி அறக்கட்டளை, சென்னை ஆகிய மூன்று தன்னார்வு தொண்டு நிறுவனங்களிடம் இருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டு, இவற்றில் குறைந்த விலைப்புள்ளி வழங்கிய ஸ்ரீமுத்தையா நினைவு அறக்கட்டளை, சென்னை என்ற தொண்டு நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அங்கீகரிக்கலாம்.பணியின் அவசியம் கருதி , நகர்மன்ற தலைவர் அவர்களின்

முன் அனுமதி பெற்று, 01.04.2023 முதல் பணி மேற்கொள்ள உத்தரவு வழங்கப்பட்டது மன்றத்தின் அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்படி பணிக்கான செலவுத்தொகை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. இந்நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 306/2023/எச்.1)

**<u>தீர்மானம் எண்.360</u>**

- குறைந்த ஒப்பந்தப்புள்ளி அங்கீகரிக்கப்பட்டது.
- நகராட்சி வருவாய் நிதியில் செலவினங்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது.
- முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை அங்கீகரிக்கப்படுகிறது.

**<u>பொருள் எண்:33</u>**

காயல்பட்டணம் நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாததால், பொது சுகாதார பிரிவு மூலம் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண். 32945/2022/இ௭2– SWM–11 நாள்.10.01.2023–ன்படி, மூன்றாண்டுகளுக்கு வெளிக்கொணர்வு அடிப்படையில் பணியாளர்களைக் கொண்டு பணிகள் மேற்கொள்ள, இவ்வலுவலக கடிதம் ந.க.எண்.1329/2021/எ.ச்.1 நாள் 28.12.2022ன்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்பிக்கப்பட்டு, மூன்று ஒப்பந்த புள்ளிகள் பெறப்பட்டு, தொழில்நுட்ப கூர்ந்தாய்வு செய்யப்பட்டும் அதனடிப்படையில் ஒப்பந்த புள்ளிகள் இறுதி செய்யப்பட்டும் உரிய அனுமதியானது கிடைக்கபெறும் வரையிலான காலத்திற்கு, திடக்கழிவு மேலாண்மை பணிகளை சிறந்த முறையில் செயல்படுத்திடவும், பொது சுகாதாரத்தின் முக்கியத்துவம் கருதியும், தற்போது பணி செய்து வருகின்ற கே.ஆர்.கன்ஸ்ட்ரக்ஷன், தென்திருப்பேரை என்ற நிறுவனத்தின் மூலம் ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட விலையின் அடிப்படையில் பணிகள் செய்திட உத்தரவு வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

பொது சுகாதார நலன் கருதி அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 470/2014/அ1)

**<u>தீர்மானம் எண்.361</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்:34</u>**

காயல்பட்டினம் நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள நகராட்சி ஒன்றிய பள்ளிகளை சம்பந்தப்பட்ட நகராட்சியின் மூலம் சீரமைப்பு செய்திட, நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.18933/2022/எச்.1

நாள்.05.08.2022ல் தெவித்துள்ளபடியும், இந்நகமன்ற அனுமதி எண். 197 நாள் 31.10.2022ன்படியும், வட்டார வளர்ச்சி அலுவலகம், திருச்செந்தூர் அவர்களின் கடிதம் எண்.அ2/2471/2022 நாள் 05.04.2023 ல் இருந்து கீழ்காணும் விபரப்படி பள்ளிகள் காயல்பட்டணம் நகராட்சி நிர்வாகத்தால் பெறப்பட்டுள்ளது என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கும் , மேற்படி பள்ளிகளின் பெயரானது நகராட்சி பள்ளிகளாக பெயர் மாற்றம் செய்திடவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண். | ஏற்கனவே உள்ள பெயர் | மாற்றம் செய்யப்படும் பெயர் | தெருக்கள் |
|---|---|---|---|
| 1 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி | நகராட்சி தொடக்கப் பள்ளி, காயல்பட்டணம் | கே.டி.எம் தெரு |
| 2 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி | நகராட்சி தொடக்கப் பள்ளி, காயல்பட்டணம் | மங்களவாடி |
| 3 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி | நகராட்சி தொடக்கப் பள்ளி, காயல்பட்டணம் | ஓடக்கரை |
| 4 | ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி | நகராட்சி தொடக்கப் பள்ளி, காயல்பட்டணம் | தீவுத் தெரு |
| 5 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி | நகராட்சி நடுநிலைப் பள்ளி, காயல்பட்டணம் | கடையக்குடி |
| 6 | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி | நகராட்சி நடுநிலைப் பள்ளி, காயல்பட்டணம் | தைக்கா தெரு |

அலுவலக குறிப்பு -

மன்றம் பார்வையிட்டு, அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.819/2022/எப்1)

**<u>தீர்மானம் எண்.362</u>**

- பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது
- இந்நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்ட ஆறு பள்ளிகளுக்கு நகராட்சி பள்ளி என்று பெயர் மாற்றம் செய்ய தீர்மானிக்கப்படுகிறது

**<u>பொருள் எண்:35</u>**

காயல்பட்டணம் நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் டிஎன் **92**டி **0054** என்ற வாகனத்தில் பழுதுகள் ஏற்பட்டுள்ளதாக வாகன ஓட்டுனர் அறிக்கை செய்ததை இந்நகராட்சி துப்புரவு ஆய்வாளரும் பரிந்துரை செய்துள்ளார். பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி அதனை நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மூன்று விலைப்புள்ளிகள் பெற்று, குறைந்த விலைப்புள்ளி வழங்கிய வெற்றிவேல் லேபர் ஒர்க்ஸ், திருநெல்வேலி என்ற நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டு, தற்போது வேலை முடிவுற்று, உரிய பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டு துப்புரவு ஆய்வாளரின் பரிந்துரையுடன், அதற்கான செலவு தொகை ரூ.**49560/–**க்கு பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்படி பணிக்கான செலவுத்தொகை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

2. இந்நகர்மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று உரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண். 113/2023/எச்.1)

**<u>தீர்மானம் எண்.363</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்:36</u>**

மாவட்ட ஆட்சித் தலைவர், அவர்களின் **10.04.2023** ம் தேதி நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தின் அறிவுரையின்படி, தூத்துக்குடி மாவட்டத்தில் புத்தக திருவிழா **21.04.2023** முதல் **01.05.2023** வரை நடைபெற்று வருகின்றது. மேலும் செயல்முறை ஆணை எண். செஙமு.எண்.வ7/6413/2023 நாள் **24.04.2023**ன்படி, காயல்பட்டணம் நகராட்சி சார்பாக மேற்படி திருவிழா நடத்திட தேவையான பங்களிப்பு நிதியாக தொகை ரூ.**2.00** இலட்சம் மட்டும் இதற்கென தூத்துக்குடி மாவட்ட புத்தக விழா குழு மூலம் தொடங்கப்பட்டுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கில் செலுத்திடவும், இந்த செலவினத்தை வருவாய் நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலககுறிப்பு–</u>

மன்றம் அனுமதி வழங்கலாம்

ந.க.எண்.அ4/369/2020

**<u>தீர்மானம் எண்.364</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>பொருள் எண்:37</u>**

இந்நகராட்சியில் நடைபெற்று வரும் திட்டப் பணிகள் / பொது நிதிப் பணிகள் / இதர பணிகள் மற்றும் வருவாய் இனங்களில் பிடித்தம் செய்யப்படும் சரக்கு மற்றும் சேவை வரிகள் ,(CGST, SGST) வருமானவரி (INCOME TAX) உரிய அரசு தலைப்பில் இணையதளத்தின் வாயிலாக செலுத்தப்பட்டதற்கு, சம்மந்தப்பட்ட நபர்களின் கணக்கு தலைப்பில் GST & IT தொகைகள் இ.பதிவேற்றம் (Return Filing) செய்யும் நடவடிக்கைகள் 2021-2022 மற்றும் 2022 - 2023 ஆண்டுகளுக்கு மேற்கொள்ளப்பட்டது. அதற்குரிய கட்டணம் ரூ. 1,13,280/- மட்டும் வழங்ககோரி M/S. SD ASSOCIATES, 20C/1/8, PEARL CITY COMPLEX, 1ST FLOOR, 1ST STREET, SUBBAIAH MUDALIYARPURAM, தூத்துக்குடி -628008 என்ற நிறுவனம் மூலம் 13.04.2023 அன்று பட்டியல் வரப்பட்டுள்ளது. மேற்காணும் செலவீனங்களை இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளும் பொருட்டு நகர்மன்ற அனுமதிக்காக முன் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

நிர்வாக நலனை கருத்தில் கொண்டு M/S. SD ASSOCIATES, தூத்துக்குடி நிறுவனம் மூலம் GST & IT இ.பதிவேற்றம் (Return Filing) செய்த வகைக்குரிய கட்டணம் ரூ. 1,13,280/- ஐ இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்.365</u>**

- அனுமதிக்கப்படுகிறது.
- இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவீனங்களை மேற்கொள்ள அங்கீகரிக்கப்படுகிறது.

**பொருள் எண்:38**

காயல்பட்டினம் நகராட்சியின் அவசர அவசியத்தின் கீழ் பணிகளை நகராட்சி சட்டம் 1920 பிரிவு15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டு தொகை வழங்கியதை மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும்.

அலுவலக குறிப்பு;

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மானம் எண்.366**

பிரிவு 15 பதிவேடு பார்வையிட்டு செலவினங்கள் அனுமதிக்கப்படுகிறது

**பொருள் எண்:39**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2022 முதல் மார்ச் - 2023** ஆம் மாதம் வரையிலான கேட்பு வசூல் நிலுவை பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| **வ.** **எ** | **வரியினங்கள்** | **நிலுவை மற்றும் நடப்பு கேட்பு**(இலட்சத்தில்) | **நிலுவை மற்றும் நடப்பு** வசூல்(இலட்சத்தில்) | **நிலுவை மற்றும் நடப்பு** நிலுவை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | சொத்துவரி | 199.76 | 176.57 | 23.18 |
| 2 | காலிமனை வரி | 23.88 | 18.44 | 5.44 |
| 3 | **குடிநீர் கட்டணம்** | 110.24 | 82.52 | 27.72 |
| 4 | **வரியற்ற இனம்** | 13.26 | 13.26 | 0.00 |
| 5 | தொழில்வரி | 35.56 | 35.56 | 0.00 |
| 6 | SUC Charges | 25.58 | 20.84 | 4.74 |

**அலுவலக குறிப்பு:**

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**தீர்மானம் எண்.367**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**<u>பொருள் எண்:40</u>**

காயல்பட்டினம் நகராட்சியின் **ஏப்ரல்-2022 முதல் மார்ச் - 2023** மாதம் வரையிலான வரவு மற்றும் செலவு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| **வரவினங்கள்** | | | |
| 110 | வரியினங்கள் | I-1 | 19672356 |
| 130 | நகராட்சியின் வாடகை வரவினங்கள் | I-3 | 680659 |
| 140 | பயனர் கட்டணங்கள் | I-4 | 8942325 |
| 150 | விற்பனை மற்றும் வாடகைக் கட்டணம் | I-5 | 961190 |
| 160 | வருவாய் மானியங்கள், பங்களிப்பு மற்றும் மானியங்கள் | I-6 | 72352114 |
| 170 | முதலீடுகள் மூலம் வருமானம் | I-7 | 7600 |
| 171 | வங்கி வட்டி | I-8 | 389215 |
| 180 | இதர வருமானம் | I-9 | 1386213 |
| | **மொத்தம்** | | **106299585** |
| **செலவினங்கள்** | | | |
| 210 | ஊதிய செலவினங்கள் | I-10 | 39303067 |
| 220 | நிர்வாக செலவினங்கள் | I-11 | 4615199 |
| 230 | இயக்க-பழுதுகள்(ம)பராமரிப்பு செலவுகள் | I-12 | 29533008 |
| 240 | நிதிச்செலவுகள் | I-13 | 1925713 |
| 250 | திட்டசெலவுகள் | I-14 | 475185 |
| 260 | மானியங்கள் (ம) பங்களிப்புகள் | I-15 | 20000 |
| | **மொத்தம்** | | **75872172** |
| | **மொத்தம் கூடுதல் / குறைவு** | | **30427413** |

**அலுவலக குறிப்பு:**

- மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்

**<u>தீர்மானம் எண்.368</u>**

பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது

**பொருள் எண்:41**

காயல்பட்டினம் நகராட்சியில் 27.04.2023-ந் தேதி காலை 11.00 மணி அளவில் நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் போது நகர்மன்ற தலைவரால் முன்மொழிந்த தீர்மானத்தினை நகர்மன்ற துணைத்தலைவரால் வழிமொழியப்பட்டது.

காயல்பட்டினம் நகராட்சி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள உள் கடைகள் (NEW BUS STAND SHOPS) 13 எண்ணம் மற்றும் வெளிக்கடைகள் (SHOPPING COMPLEX) 8 எண்ணம் ஆகியவற்றில் ஒன்பது ஆண்டுகளுக்கு மேலாக குத்தகை வாடகை மறு மதிப்பீடு செய்யாமல் இருந்து வரும் ( 9 + 7 = 16) கடைகளுக்கு இந்நகராட்சி நிர்வாக நலனை கருதியும், நகராட்சி நிதி நிலைமையை உயர்த்தும் வகையில் அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.03.07.2007-யின்படி, நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு இந்நகர்மன்ற தீர்மான எண். 299, நாள்.28.02.2023-ன்படி, 01.04.2023 முதல், பொது ஏல நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் தமிழ்நாடு சட்ட மன்ற அறிவிப்பு 2023 - 2024 மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை மானிய கோரிக்கை எண். 34 (6) ன்படி நகர்புற உள்ளாட்சி அமைப்புகளில் பேருந்து நிலையங்கள் மேம்படுத்துவதற்கு வெளியிடப்பட்ட அறிவிப்பினை தொடர்ந்து காயல்பட்டினம் நகராட்சி “D” வகை பேருந்து நிலையம் அமைக்கப்பட்டு 30 ஆண்டுகளுக்கு மேல் ஆவதால், பெருகி வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப பேருந்து நிலையம் தரம் உயர்த்தி நவீன வசதிகளுடன் பேருந்து நிலையத்தை மேம்படுத்தும் பணி செய்வதற்குரிய திட்ட முன் மொழிவுகள் தயார் செய்து சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையிலும், காயல்பட்டினம் நகராட்சி பேரூந்து நிலையத்திற்குள் குறைவான பேரூந்துகள் மட்டுமே வந்து செல்வதாலும் பேரூந்து நிலையத்தில் தற்போது கடை நடத்தி வரும் வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு அவர்களின் கோரிக்கையின் படியும், அரசாணை (நிலை) எண்.92 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி4) துறை நாள்.03.07.2007-யின்படி தெரிவித்துள்ள நடைமுறைகளை பின்பற்றி பேருந்து நிலைய கடைகளுக்கு பொதுப்பணித்துறை மற்றும் உள்ளூர் அங்காடி கடைகளின் வாடகை மதிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் உரிய நடவடிக்கை மேற்கொண்டு நகராட்சி பேருந்து நிலைய கடைகளுக்கு 01.04.2023 முதல் திருத்தியமைக்கப்பட்ட அங்காடி மதிப்பில் கடைவாடகை நிர்ணயம் செய்வதற்கு மன்றம் ஆலோசித்து முடிவு செய்து தீர்மானிக்க.

**<u>தீர்மானம் எண்.369</u>**

காயல்பட்டினம் நகராட்சி பேரூந்து நிலைய கடைகளுக்கு இந்நகர்மன்ற தீர்மான எண்-299,நாள்-28.02.2022ன்படி, ஏலம்/ஒப்பந்தபுள்ளி நடவடிக்கை மேற்கொள்ள நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை பரிசீலனை செய்து,தற்போது பேருந்து நிலையம் தரம் உயர்த்தி நவீன வசதிகளுடன் மேம்படுத்தும் பணி செய்யவிருப்பதாலும், பேரூந்து நிலையத்தில் குறைவான பேரூந்துகள் மட்டுமே வந்து செல்வதாலும், பேரூந்து நிலைய வியாபாரிகளின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டும், தற்போது கடை நடத்தி வரும் கடை உரிமைதாரர்களுக்கு ஏல குத்தகை நடைமுறை விதிகளின்படி, மேலும் 9 ஆண்டுகளுக்கு பேரூந்து நிலைய அனைத்து கடைகளுக்கும் ஒரே சீரான வாடகை நிர்ணயம் செய்து,அனுமதி வழங்குவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டது.

**ஒம்/கே.ஏ.எஸ். முத்து முஹம்மது**
**நகர்மன்ற தலைவர்,**
**காயல்பட்டினம் நகராட்சி**